பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

Nallur Branch Library

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 02 வியாழக்கிழமை (13-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 78

## இரத்தினபுரி பகுதியில் கலவரம் வெடித்தது!

### காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு

கொழும்பு, பெப்ரவரி 13

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெல இரத்தினபுரி குருவிற்ற பகுதியில் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து நேற்று இரத்தினபுரி நகரப் பகுதியில் கலவரம் வெடித்தது. நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக அப்பகுதியில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவை அரசு பிறப்பித்துள்ளது.

நாலந்தா எல்லாவெல சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து உடனடியாக நேற்று முன்தினம் மாலையே இரத்தினபுரிப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது தெரிந்ததே

எனினும் உள்ளூராட்சித்

(7 ஆம் பக்கம் பார்க்க)

### கிரனேட் வீச்சு

நேற்றுக் காலை 10.45 மணிக்கு மீசாலைஐயாகடையடிப் பகுதியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சு சம்பவத்தில் ஒரு படைவீரர் காயமடைந்தார். (உ-117)

### ரெலோ போட்டி

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது வேட்பாளர் பட்டியலை 'ரெலோ' அமைப்பு நேற்றுத் தாக்கல் செய்தது.

கொழும்பு மாநகரசபை முன்னாள் மேயர் கே. கணேசலிங்கம் தலைமையிலான சுயேச்சைக் குழு மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐ. தே. க., ஜே. வி. பி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியனவும் கொழும்பு மாநகரசபைக்கான தமது வேட்பாளர் பட்டியல்களை நேற்றுத் தாக்கல் செய்தன.

## புத்தூர் சம்பவம்! புளொட் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 13

கடந்த திங்களன்று புத்தூரில் இடம் பெற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டித்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) யாழ். மாவட்டச் செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

கடந்த 10 ஆம் திகதி புத்தூர் கிழக்குப் பகுதியில் அரச படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் விளைவாக அப்பாவிப்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை நடத்த உறுதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் 51 ஆவது படையணிப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல்பலகல்லவை யாழ்ப்பாணத்தில் இயங்கும் மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றுக் காலை ஒன்றாகச் சந்தித்துப் பேசினர்.

அப்போது கடந்த திங்களன்று காலை புத்தூர் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவம் குறித்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை விரைவில் துரிதம்!

யாழ்ப்பாணம், பெப் 13

யாழ்ப்பாணம் வருவதற்காகத் திருகோணமலையிலும் வவுனியாவிலும் ''தவம்'' கிடக்கும் தமிழ் மக்களை ஒரே மூச்சில் யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

இதன்படி —

''நரோமா'', ''தராகி'', ''எண்டூரன்ஸ்'' ஆகிய மூன்று கப்பல்களிலும் மூன்று நாள்களுக்கு ஒரு தடவை ஐந்நூறு பேர் என்ற அடிப்படையில் பயணிகளை திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் கூட்டிவர ஏற்பாடாகி உள்ளது.

இது தவிர —

சுமார் ஐந்நூறுபயணிகளை

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்கள்; கிழக்கில் மூவர் பலி!

கடந்த திங்கள் இரவு 9.45 மணியளவில் ஒட்டமாவடிப் பிரதேசத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் இரு பொதுமக்கள் உயிரிழந்தனர்; ஆறுபேர் காயமடைந்தனர்.

காயமுற்றோர் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் கவலைக்கிடமான நிலையில் இருந்த மூவர் ஹெலிக்கொப்டர் மூலம் உடனடியாகப் பொலன்னறுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலைக்குத் தெற்கேயுள்ள தாராவெளி என்ற இடத்திலிருந்து புலிகளே இந்தச் ஷெல்களை ஏவியதாகப் படைத்தரப்பினர் குற்றம் சாட்டினர்.

ஒட்டமாவடியில் இடம்பெற்ற தமிழர் — முஸ்லிம் கலவரப் பதற்றத்தைத் தணிப்பதற்காக அங்கு தங்கியிருந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஐ. தே. கவின் எம்.பியான செய்யத் அலிசாஹிர் மௌலானாவின் வீட்டிற்கு அருகிலும் ஷெல் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

நேற்று முன்தினம் இரவு வாழைச்சேனை பேத்தாளைப்பகுதி மீது பத்து மோட்டார் ஷெல்கள்ஏவப்பட்டன. அதில் சாதாரண பிரஜை ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.

புலிகளே இந்த ஷெல்களையும் ஏவியதாகப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## கப்பலை மோந்து பார்ப்பதற்கு மோப்ப நாய்கள் வரவழைப்பு

கொழும்பு, பெப். 13

முல்லைத்தீவுக் கடற்பிரதேசத்தில் கைப்பற்றப்பட்டு திருகோணமலை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சைப்பிரஸ் கப்பலான 'கரீபியன் குயீன்' தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு விசேட பொலீஸ் குழு ஒன்று திருகோணமலை வந்துள்ளது.

கப்பலில் வெடிமருந்து வாசனை இருக்கின்றதா என்பது குறித்து மோப்பம் பிடிப்பதற்காக மோப்ப நாய்களையும் அக்குழு அழைத்து வந்துள்ளது.

இந்த நாய்கள்வெடிமருந்து வாசனையை மோந்து பிடிக்கக் கூடிய பயிற்சி பெற்றவை என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் சொந்தக்காரர் நேரடியாகத் திருமலை வந்து, கப்பல் உரிமையை நிரூபிக்கும் பட்சத்திலேயே கப்பல் விடுவிக்கப்படும் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

துறைமுகத்துக்கு வெளியே வைத்து இக்கப்பலைச் சோதனை செய்த கடற்படையினர் கப்பலில் ஆயுதங்கள் இல்லை எனத் தெரிவித்திருந்தனர்.

கொழும்பில் இருந்து வந்த பொலீஸ் கோஷ்டி கப்பலை துறைமுகத்துக்குள் கொண்டு வந்து கப்பலையும், சிப்பந்திகளையும் துருவித்துருவி விசாரித்து வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

### நாலந்தா எல்லாவெல படுகொலைச் சம்பவம்:

## ஐ. தே. க. எம்.பி., முன்னாள் மேயர் மற்றும் பலரை பொலீஸ் தேடுகிறது

கொழும்பு, பெப். 13

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் இளம் எம். பியான நாலந்தா எல்லாவெல இரத்தினபுரி குருவிற்ற பகுதியில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக —

ஐ. தே. கவின் இரத்தினபுரி மாவட்ட எம். பியான சுஸந்த புஞ்சிநிலமே, அக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் மேயர் மகிந்த ரட்ணதிலக ஆகியோர் உட்பட சுமார் 15 பேரை பொலீஸார் தேடி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

நாலந்தா எல்லாவெவ குழுவினர் குருவிற்ற பகுதி ஊடாக வந்து கொண்டிருந்த போது —

ஐ. தே. கவின் எம்.பியான சுஸந்த புஞ்சிநிலமே தலைமையில் வந்த — சுமார் 15 பேர் கொண்ட — குழு ஒன்று தங்கள் வாகனத்தை நாலந்தா எல்லாவெலவின் காருக்குக் குறுக்கே செலுத்தி எல்லாவெல குழுவினரை மறித்ததாகவும் —

பின்னர் ஆயுத முனையில் எல்லாவெலவை வாகனத்தை விட்டு இறக்கிச் சுட்டதாகவும் —

இச்சம்பவத்தின் போது

(7 ஆம் பக்கம் பார்க்க)

### அனுரா வீட்டில் தேடுதல்

நாலந்தா எல்லாவெல படுகொலைச் சம்பவத்தை அடுத்து —

கொழும்பு றொஸ்மிட் பிளேஸில் உள்ள அனுரா பண்டாரநாயக்காவின் வீடு பொலீஸாரால் சோதனையிடப்பட்டது என செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இந்தப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் ஐ.தே.க. பிரமுகர்கள், ஐ.தே.கவின் எம்.பியான அனுரா பண்டாரநாயக்காவின் வீட்டில் ஒளிந்திருக்கக்கூடும் எனக் கருதப்பட்டதாலேயே அங்கு தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் வீட்டுக்கு அருகிலேயே அவரின் சகோதரர் அனுராவின் வீடு உள்ளது (உ-10)

## பூநகரி ஊடாக மாற்றுப் பாதை; "எடிபல"வின் ஒரு முக்கிய நோக்கம்

### இராணுவ ஆய்வாளர் கருத்து

கொழும்பு, பெப். 13

வவுனியா — மன்னார் — முழங்காவில் — பூநகரி வீதியூடாக மாற்று விநியோகப் பாதை ஒன்றைத் திறப்பதே 'எடிபல' இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்ததன் நோக்கமாக இருக்கலாம்.

அரசியல் — இராணுவ விமர்சகர் தராகி இவ்வாறு ஊகம் தெரிவித்துள்ளார்.

'மிட் வீக் மிரர்' பத்திரிகையில் அவர் எழுதியுள்ள கண்ணோட்டம் ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'எடிபல' இராணுவ நடவடிக்கை தள்ளாடி இராணுவ முகாமைப் பாதுகாக்கும் பிரதான நோக்குடனேயே திட்டமிடப்பட்டது. ஆயினும் உள்ளூராட்சித் தேர்தலையும் கணக்கில் வைத்தே இத்தாக்குதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியை விடத் தாம் யுத்தத்தைத் துரிதமாக நடத்துகின்றோம். என்பதைச் சிங்கள மக்களுக்குத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கையை

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் மாத கண்ணீர்ப் பூக்கள்

திருமதி
வளர்மதி
தவநாதன்
மனம் மகிழ:-
02 - 04 - 1966

செல்வி
தௌசணியா
தவநாதன்
மனம் மகிழ:-
22 - 04 - 1994

மனம் துவள:- 13 - 08 - 1996

உன் நாதன் தவநாதன்
தன்வீடு மதியாகத் திகழ
தேடியே எடுத்தான் வளர்மதி உன்னை
உன் சந்தோசம் தன் வாழ்வென்று எண்ணி
யாவுமே செய்தான் புன்சிரிப்புடன்
இணையற்ற இல்வாழ்வில் ஈன்றெடுத்தாய் -
தௌசணியாவை
இருவர் புன்சிரிப்பிலும் குழிவிழுமே கன்னத்தில்
மாதாவைத் தரிசிக்க ஆவலுடன் சென்றவேளை
கடமைக்கும் உடம்பு இல்லையென்று
தீராப்பசியுடன் அக்கினி உன்னையும் உன்
குலக்கொழுந்தையும் ஆசையுடன்
அரவணைத்தானோ?
பாவியான அப்பாவைத் தனியாகத் தவிக்கவிட்டு
ஒருவர் துணை ஒருவராக
ஆண்டவனிடம் நீங்கள் கைகோர்த்துச்
சென்றதேனோ?
காலங்கள் பல கடந்தாலும் அழியுமா உங்கள்
நினைவுகள்?

இல்லைவே இல்லை!
என்றும் எங்கள் கண்மணிகளுக்கு கண்ணீரைக்
காணிக்கையாக்கி
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உங்களை என்றும் மறவாத
**பெரியம்மா - அம்மம்மா,**
**சு. திருப்பதி,**

**அத்தான்மார் - பெரியப்பாமார்:-**
**வை. யோகேந்திரன் (பூவாசம்),**
**ஐ. தயானந்தன் (இத்தாலி),**
**நா. இந்திரநாதன் (பிரான்ஸ்),**
**அக்காமார், பெரியம்மாமார்:- யோ. பிரியதர்சினி,**
**த. பிரியகுமுதினி,**
**இ. பிரியவினோதினி.**
**அண்ணா, மாமா:- சு. பிரியசுதர்சன் (துரை),**
**பெறாமக்கள், அண்ணாமார், அக்காமார்.**

வை. யோகேந்திரன்,
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு,
சுன்னாகம்.
(சி/122)

## முடிவுகள் இன்று

யாழ்ப்பாணம், பெப். 13
யாழ். பல்கலைக்கழக சிறப்புக் கலை, பொதுக் கலை இறுதியாண்டுபரீட்சை முடிவுகள்இன்றுவெளியாகும் என்று பல்கலைக்கழக வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.
(உ-3)

## படகுகளில் மீன் பிடிக்க தடை

தென்மராட்சி, பெப். 13
தென்மராட்சிப் பிரதேசத்தில் நாவற்குழி தொடக்கம் கேரதீவு வரையிலான கடற்பகுதியில் படகுகளில்சென்று மீன் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இக்கடலில் காலை 6. 00 மணி தொடக்கம் மாலை 5. 00 மணிவரை மீன் பிடிக்கச் செல்பவர்கள் கடற்கரை அருகில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் அடையாள அட்டையை ஒப்படைத்து விட்டு கடலுக்குள் நடந்து சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.
(இ-117)

## பரீட்சை முடிவுகள் தாமதமாகும்

கொழும்பு, பெப். 13
இவ்வாரம் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட — ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சை — முடிவுகள் அடுத்த வாரமே வெளியாகும் என தற்போது பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.
திணைக்களத்தில் உள்ள கம்பியூட்டர்கள்பழுதடைந்ததாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் —
எவ்வாறாயினும் இம்மாத இறுதிக்குள்பரீட்சைமுடிவுகள் வெளியாகும் என்றும் —
பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.
(உ-150-3)

# ஆறாம் மாத அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்





திருமதி
தவநாதன் வளர்மதி
**மலர்வு: 02-04-1966**

செல்வி
தவநாதன் தௌசணியா
**மலர்வு: 22-04-1994**

**இடைவழி உதிர்வுகள்: 13-08-1996**

**அன்னையும் குழந்தையும் அணைந்திடும் வேளையில்**

மாதம் ஆறு போனாலும் மனந்தான் ஆறிப் போகாதே!
பாதம் வருடித் தருவாயே! பாங்கில் புதினம் சொல்வாயே!
காதம் அகிகம் என்றாலும் கருணை உளம் படைத்தவளே!
நாதம் இனிய பொற்பாதம் நாடித் தொழுது நாம் பணிவோம்.

வாழும் மனையில் வளர்மதியை வாசம் செய்ய வைத்தவனை
நாளும் நெஞ்சின் நினைவாக நாடும் போற்ற வைத்தவனை
பாழும் உலகிற் பிறந்தேயாம் பாசம் போக்க வைத்தவனை
யாழும் குழலும் இனியின்றி யாமும் பாதம் போற்றுவமே!

தக்க பெண்ணாம் தௌசணியா தன்னைப் பெற்ற தந்தைக்கும்
ஒக்க மதிக்கும் வளர்மதியை உறவாய்க் கொண்ட தவநாதன்
பக்கத் துள்ளோர் மனதிருத்தி மதிக்க உலகம் செய்யுமென
சிக்கல் தீர்ப்பார் சிவனவனை சிந்தை இருத்தித் தொழுவோமே!

இவர்களின் துயரச் செய்தி கேட்டு, துயர் துடைத்து, எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (13-02-1997) வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மு. நாகலிங்கம் J.P.**
**குடும்பத்தினர்.**

மயிலங்காடு,
ஏழாலை.
(சி/121)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெகதீஸ்வரி சிவதாசன்
(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி சிவதாசன் அவர்கள் 11-02-97 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.
அன்னார் சிவதாசன் (ஆசிரியர், பொன் பரமானந்தர் மகாவித்தியாலயம் — யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) அவர்களின் அன்பு மனைவியும், இராசேந்திரம் தம்பதிகளின் அன்பு மகளும், தர்சன் (முகாமைத்துவத்துறை மாணவர் - யாழ். பல்கலைக்கழகம்) சேந்தன் (யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு அன்னையும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி, கணேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தகுமார், அகிலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகசுந்தரம், வாமதேவன், சிவந்தி, சக்திவேல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-02-97 புதன் கிழமை நல்லூரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க, சிவதாசன்**
(கணவர்)

68, மருதடி வீதி,
நல்லூர்.
(45266)

## திருமதி கனகபூரணம் சுப்பிரமணியம்
**(பாக்கியம்)**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகபூரணம் (பாக்கியம்) சுப்பிரமணியம் 10 - 02 - 97 அன்று வவுனியாவில் காலமானார்.
அன்னார் அப்பாக்குட்டி சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி (சுவிஸ்), பரமேஸ்வரன் (அப்பையா - கொக்குவில்) லோகேஸ்வரி (மட்டுவில்), பவளமலர் (மட்டுவில்), தியாகராசா (சுவிஸ்), விக்னேஸ்வரி (மட்டுவில்), ராஜினி (மட்டுவில்) ஆகியோரின் அருமைத்தாயாரும், செல்வநாயகம் (சுவிஸ்), மல்லிகாதேவி, சத்தியநாதன், கந்தசாமி, மாலினிதேவி (சுவிஸ்), சிவசுந்தரம் (ஜேர்மனி), சுரேஷ் (மல்லாவி) ஆகியோரின் அன்புமாமியாருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
**சு. பரமேஸ்வரன் (அப்பையா)**
(மகன்)

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(45257)

## இராமலிங்கம் கனகசபை

இல, 35, நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரான இராமலிங்கம் கனகசபை அவர்கள் 12-02-97 அன்று காலமானார்.
அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும், கௌரி (நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), புவனாம்பிகை (விவசாய திணைக்களம், கிளிநொச்சி), வேதாம்பிகை (விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி , யோகாம்பிகை (லங்கா சிமெந்து லிமிடெட்), மல்லிகா (முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), சிவகுமார் (யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை) அவர்களின் மாமனாரும், பிரசாந்தின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், ஆறுமுகம், சங்கரப்பிள்ளை, சீனித்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-02-97) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று திருநெல்வேலி இந்து மயானத்தில் பூதவுடலுக்கான தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**க. சிவகுமார்**
(மகன்)

35, நாவலடிலேன்,
திருநெல்வேலி.
(45265)

## திருமதி நேசம்மா இரத்தினசிங்கம்
**(காரைநகர்)**

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் குறுக்கு வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நேசம்மா இரத்தினசிங்கம் 12-2-97 புதன்கிழமை காலை சிவபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற முருகேசு இரத்தினசிங்கத்தின் (ஒய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், அருளம்மா, இராசரத்தினம், மனோன்மணி, காலஞ்சென்றவர்களான அருளையா, நல்லம்மா ஆகியோரின சகோதரியும், கிருஸ்ணமூர்த்தி (கனடா, ஒய்வுபெற்ற சுகாதார பரிசோதகர், யாழ் போதனா வைத்திய சாலை), சுந்தரமூர்த்தி (ஆசிரியர்), செல்வமணி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமகள் (கனடா), திலகவதி (ஆசிரியை), சுப்பிரமணியம் (ஒய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13-2-97 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ. சுந்தரமூர்த்தி**
(மகன்)

82/2, குறுக்கு வீதி,
நல்லூர்.
(45261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# திரிபுரா புலிப்படையினர் தாக்குதல்
# 17 பொதுமக்கள் பலி! பஸ்கள் எரிப்பு!!

புதுடில்லி, பெப். 13
வட இந்திய மாநிலமான திரிபுராவில் அகில திரிபுரா புலிப்படைத் தீவிரவாதிகள் கிராமம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் 17 பேர் பலியாகியுள்ளனர்.

அகர்தலா பகுதியில் தக்கர்ஜா என்ற கிராமமே நேற்று முன்தினம் இரவு தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

கிராமத்துக்குள் புகுந்த தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், வீடுகளுக்குத் தீ வைத்தும் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தில் இருபதுக்கு மேற்பட்ட பஸ்களும் தீக்கிரையாகின,

தாக்குதலில் காயமடைந்த பத்துக்கும் மேற்பட்டோர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதில் இந்திய பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## டயானாவின் திருமண உடைகள் ஏலத்தில் விற்கப்படும்!

லண்டன், பெப். 13
இளவரசி டயானா தனது திருமண ஆடைகளை ஏலத்தில் விற்கவுள்ளார், ஏல விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை ஊனமுற்றோரின் நல்வாழ்வுக்குகாக அவர் வழங்கவுள்ளார்.

சார்ள்ஸ்- டயானா திருமணத்தின் போது டயானா அணிந்த 65க்கும் மேற்பட்ட ஆடைகளே ஏலத்தில் விற்பனையாகவுள்ளன.

எதிர்வரும் யூன் மாதம் இங்கிலாந்தில் உள்ள கிறிஸ்ரி ஏல விற்பனை நிலையத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஏலவிற்பனை நடைபெறவிருக்கிறது.

இந்த ஆடைகள் ஏலவிற்பனை மூலம் சுமார் 8 கோடி ரூபாவை சேகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இளவரசி டயானா அண்மையில் இளவரசர் சார்ள்ஸிடமிருந்து விவாகரத்துப்பெற்றார். (ஐ-10)

## அணு சோதனைத் தடை ஒப்பந்தம் இந்தியா கைச்சாத்திடாது!

### மொஸ்கோவில் குஜ்ரால் தெரிவிப்பு

மொஸ்கோ, பெப். 12
சுமார் 140 நாடுகள் கையெழுத்திட்ட அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடப் போவதில்லை என்று இந்தியா மீண்டும் தெரிவித்திருக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் மொஸ்கோவில் இதைத் தெரிவித்தார். — மொஸ்கோவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

தற்போது நிறைவேற்றப் பட்டுள்ள அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்த வடிவமானது இந்தியாவின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை என்று குஜ்ரால் கூறியுள்ளார். (ஐ-10)

## இரண்டு மூளைகளுடன் சீனாவில் அதிசய சிறுவன்!

பீக்கிங், பெப். 13
சீனாவின் தென் பகுதியில் உள்ள ஒரு அதிசயச் சிறுவனைப் பற்றிய தகவல்களை ஏ. எப். பி. செய்தி நிறுவனம் அண்மையில் வெளியிட்டிருக்கிறது.

ஜு என்ற அந்தச் சிறுவன் 1995 இல் பிறந்தான். அவனுக்கு இரண்டு மூளைகள் இருப்பது மருத்துவ சோதனைகளின் போது தெரிய வந்தது.

இரண்டு மூளைகளுடனும் அவன் இன்னமும் வாழ்ந்து வருகிறான். ஒரு நாளில் ஒருமணி நேரம் மட்டுமே அவன் உறங்குகிறான். அவனது உடலின் ஏனைய உறுப்புகள் இயல்பாகவே செயற்படுகின்றன. (ஐ-10)

## கைதிகள் ஒப்படைப்பு

டெல்அவிவ், பெப். 13
பலஸ்தீனப் பெண் கைதிகளை இஸ்ரேல் விடுவித்துள்ளது. விடுதலை செய்யப்பட்ட முதல் பெண் கைதி பிறெசில் நாட்டுக் குடியுரிமை பெற்றிருந்ததால் அவர் பிறெசிலுக்கு அனுப்பப்பட்டார்.

மற்றவர்களை அவர்களது உறவினர்களும் பலஸ்தீன அதிகாரிகளும் பொறுப்பேற்றுக் கொண்டனர். (ஐ-10)

# உலக அரங்கில்

## பெருவில் முதற்கட்ட பேச்சு

லீமா, பெப். 13
பெருநாட்டின் தலைநகர் லீமாவில் ஜப்பானிய தூதரக வளாகத்தில் இன்னமும் 72 பேரை பணயக் கைதிகளாக வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்களுடன் பெரு அரசு நேரடிப் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

லீமா நகரில் 4 மணி நேரம் நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தையில் பெரு அரசாங்கத்தின் சார்பில் டொமிங்கோ பலர்தோவும், கிளர்ச்சியாளர்கள் சார்பில் றோமி றோஜர்ஸும் கலந்து கொண்டனர்.

றோமிறோஜாஸ் கிளர்ச்சிப் படையின் இரண்டாவது நிலையில் உள்ள தலைவராவார். பேச்சு விவரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை. (ஐ-10)

## மணமாகாத பெண்கள் குழந்தை பெற அனுமதி!

### இஸ்ரேலிய அரசு சட்டம்!!

டெல் அவிவ். பெ. 13
திருமணமாகாத பெண்களும் செயற்கை முறையாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள இஸ்ரேலிய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திருமணமாகி குழந்தைப்பேறு இல்லாத பெண்களைப் போலவே இவர்களும் விந்து வங்கிகளில் ஆண் விந்துகளைப் பெற்று செயற்கை முறையாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

திருமணமாகாத பெண்கள் திருமணமான பெண்களுக்குச் சமமாக நடத்தப்படவேண்டும் எனக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து இஸ்ரேல் அரசு இந்த அனுமதியை திருமணமாகாத பெண்களுக்கு வழங்கியுள்ளது.

ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் பெண்கள் அல்லது பெண்களைத் திருமணம் செய்யும் பெண்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள இந்தச் சட்டம் வழி விட்டுள்ளது. (ஐ-10)

## எதிர்க்கட்சிகளின் போராட்டம் செர்பியாவில் வெற்றி!

செர்பியா, பெப். 13
செர்பியாவில் எதிர்க்கட்சிகளின் தேர்தல் வெற்றியை நாடாளுமன்றம் 4 மணிநேர கடுமையான விவாதத்திற்குப் பின் ஏற்றுக் கொண்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் தேர்தல் வெற்றிகளை செர்பிய அதிபர் மிலோசெவிக் அண்மையில் ரத்துச் செய்த பின் சுமார் 4 மாதங்களாக நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் போராட்டங்களும், அதனைத் தொடர்ந்து நிலவி வந்த அரசியல் நெருக்கடி நிலையும் ஒருவாறு முடிவுக்கு வந்துள்ளன.

கடந்த 10 ஆண்டுகளாக இரும்புக்கர ஆட்சி நடத்தி வரும் அதிபர் சுலோபொதோன் மிலோசெவிக்கு எதிர்க்கட்சிகளின் இந்த வெற்றியானது மிகப்பெரும் சவாலாக அமைந்துள்ளது. (ஐ-10)

## வெளிநாட்டவர் செச்சினியா வர ரஷ்யா முட்டுக்கட்டை போடுகிறது!

குறொஸ்னி, பெப். 13
புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செச்சினிய அதிபர் ஆஸ்சன் மாஸ்கொடாவின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளவரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ரஷ்யா பலவிதமான தடைகளை விதித்து ரஷ்யாவிற்குள் நுழைய விடாமல் தடுத்து வருவதாக செச்சினிய அதிகாரி ஒருவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ரஷ்யாவின் மிரட்டலினால் விழாவுக்கு வருகை தரவிருந்த மொறோக்கோ நாட்டு அதிகாரிகள் பின்வாங்கி விட்டனர் — என்றும்

உக்கிரேய்ன் அதிகாரிகளை ரஷ்ய விமான நிலையத்தில் இறங்க ரஷ்யா அனுமதிக்கவில்லை என்றும் —

தனி விமானத்தில் பயணம் செய்த போலந்து நாட்டுப் பிரதிநிதிகள் மட்டுமே செச்சினியா வந்து சேர்ந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

விழாவில் கலந்து கொள்ளும் வெளிநாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான நாடுகளாகக் கருதப்படும் எனவும், அந்த நாடுகளுடனான தூதரக உறவுகளை ரஷ்யா துண்டித்துக் கொள்ளும் எனவும் ரஷ்யா அச்சுறுத்தி வருகிறது.

ரஷ்யாவின் இந்த நிலைப்பாடு ஒரு மாபெரும் அரசியல் மடைத்தனம் என்றும், கடுமையான பின் விளைவுகளை அது உருவாக்கும் எனவும் செச்சினியா எச்சரித்துள்ளது. (ஐ-10)

## சிறைக்கைதிகள் சுட்டுக் கொலை

பிலிப்பைன்ஸ் தென் மாகாண நகரில் சிறையில் இருந்து தப்பிச்செல்ல முற்பட்ட 4 கைதிகள் சுட்டுக் கொல்லப் பட்டிருப்பதாக பொலீஸார் அறிவித்துள்ளனர். (ஐ)

## தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 1,500 பேர் ஒய்வு பெற்றனர்

திருகோணமலை, பெப் 13
கடந்த டிசம்பர் மாதத்தில் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து 500 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் ஒய்வு பெற்றுவிட்டனர் என்று மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் ஒய்வு பெற்றதையடுத்து ஆசிரியர் பற்றாக்குறை 5 ஆயிரத்து 600 ஆக உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பட்டதாரி ஆசிரியர்கள் 769 பேருக்கும், ஆரம்ப ஆசிரியர்கள் 2 ஆயிரத்து 500 பேருக்கும், ஆங்கில ஆசிரியர்கள் ஆயிரத்து 350 பேருக்கும் வடக்கு — கிழக்கில் பற்றாககுறை நிலவுவதாக மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்தது. (இ-3-150)

## புலிகளின் பங்களிப்பு இன்றியே சமாதானம் தரக்கூடியது

### தீர்வுத்திட்டம் குறித்து ஜனாதிபதி

கொழும்பு, பெப். 13
'எனது அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இனப் பிரச்சினைத் தீர்வுத் திட்டம் விடுதலைப் புலிகள் பங்கு பற்றாமலேயே தமிழ் மக்களுக்கு சமாதானத்தைக் கொண்டுவரக் கூடியது'.

கடந்தவாரம் பி. பி. ஸி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெரும்பாலான தமிழ் மக்கள் அரசின் தீர்வுத் திட்டத்தை வரவேற்றுள்ளதால் அதனை அமுல்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அவர் கூறினார். (இ-3)

# நோயாளருக்கான கப்பல் சேவை; செஞ்சிலுவைக் குழு விரிவுபடுத்தும்

### கூடுதலானோர் பயணம் செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 13
செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் நடத்தப்பட்டு வரும் நோயாளர் கப்பல் சேவையை மேலும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் சேவையில் ஈடுபடும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் கப்பலில் 12 நோயாளிகள் செல்லவே வசதி உள்ளது.

இக்கப்பலில் 25 நோயாளர் செல்லக்கூடிய வகையில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவதற்காக இக்கப்பல் தற்சமயம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இக்கப்பலில் கூடுதல் வசதிகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர் எதிர் வரும் 19 ஆம் திகதி முதல் இக்கப்பல் மீண்டும் சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் ஏராளமான நோயாளிகள் இங்கு இருப்பதாலேயே கப்பல் சேவை விரிவுபடுத்தப்படவிருக்கிறது என்றும்—

சிகிச்சை பெற்று முடிந்த பின்னர் அவர்களை மீண்டும் இங்கு அழைத்து வரவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும் — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-3)

## தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஒலுவிலில் அடுத்தமாதம் ஆரம்பம்

தென் கிழக்கு பல்கலைக் கழகம் அடுத்தமாதம் முதல் ஒலுவிலில் இயங்க ஆரம்பிக்கவிருக்கிறது.

ஒலுவிலில் ஜேர்மன் அரசாங்கத்தால் முன்னர் அமைக்கப்பட்ட அரிசி பதனிடும் தொழிற்சாலைக்கட்டடமே தற்போது பல்கலைக்கழகக் கட்டடமாக மாற்றப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்துக்கு ஏற்றவகையில் அந்தக் கட்டடத்தை மாற்றியமைக்க 30 கோடி ரூபாவை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

இதேவேளை — பல்கலைக் கழகத்துக்கு வீதிகள் அமைக்கவும் 30 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. (ஐ-150-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆதரவாளர்கள் தாக்கப்படுவதாக அரசு மீது ஜே. வி. பி குற்றச்சாட்டு!

கொழும்பு, பெப். 13

தமது ஆதரவாளர்கள் தென்பகுதியின் பல இடங்களிலும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சார்ந்தவர்களால் தாக்கப்பட்டிருப்பதாகவும் — பலர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் ஜே. வி. பி குற்றஞ் சாட்டியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானவர்கள்அது பற்றிப்பொலீஸில் முறைப்பாடு செய்துள்ள போதிலும், பொலீஸார் எவ்வித பதில் நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று ஜே. வி. பியின் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்திருக்கிறார்.

தமது கட்சி தேர்தல் பிரசாரம் நாளை திஸமகராமவில் ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார். (ஐ-3-150)

## தற்கொலைக் குண்டுதாரி அணியும் "ஜாக்கட்"டுக்கள்

### மன்னார் பகுதியில மீட்கப்பட்டன

கொழும்பு, பெப். 13

கொழும்பில் தாக்குதல் நடத்துவதற்காக கடல் மார்க்கமாகக்கொண்டு வரப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தற்கொலைக் குண்டுதாரிகள் அணியும் நான்கு 'ஜாக்கட்'டுக்கள் உட்பட குறிப்பிட்ட தொகை ஆயுதங்கள் உடப்பில் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

உடப்பில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்ட இந்தப் பொருள்களில் வெடி மருந்துகள் பொருத்தப்பட்ட நிலையில் 4 'ஜாக்கட்'டுக்கள், இரு ரி-56 துப்பாக்கிகள், ஒரு மோட்டார் லோஞ்சர், 12 கிறனேட்டுக்கள், கையில் எடுத்துச் செல்லக் கூடிய தொலைத் தொடர்புக் கருவி, ஆயிரம் பென்ரோச் பற்றறிகள், 4 சக்தி வாய்ந்த அன்ரனாக்கள் உட்பட பலவற்றைப் பொலீஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப் பட்டது. (இ-3-150)

## சுகாதார சேவை அலுவலகத்துக்கு 3 மாடி கட்டடம்

சண்டிலிப்பாய், பெப். 13

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் அலுவலகத்துக்கு புதிய மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

தற்போது யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியம் அமைந்துள்ள காணியில் இந்த மாடிக்கட்டடம் நிறுவப்படவுள்ளதாகவும் —

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் முதற் கட்டமாக இக் கட்டட வேலைகளுக்காக 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் — யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கொழும்பு விலைக்கு கிருமிநாசனி

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான கிருமி நாசனிகளை கொழும்பு விலைக்கே வழங்க பெற்றோலியம் கூட்டுத்தாபன யாழ். அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

முதல் கட்டமாக எடுத்து வரப்பட்ட கிருமி நாசனிகள் விவசாயிகளுக்கு ப. நோ. கூ. சங்கங்கள் மற்றும் கமநல சேவை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்பட்டன.

அடுத்து வரவிருக்கும் கப்பலில் கூடுதலான அளவு கிருமிநாசனி வகைகளை எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் சிசிச்சை பிரிவு

### வாரம் 3 நாள்கள் இயங்குகிறது

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் தற்போது வாரத்தில் மூன்றுதினங்கள் வெளிநோயாளர் சிகிச்சை பிரிவு மாத்திரம் செயற்பட்டு வருகிறது.

வேலணை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இவ்வைத்தியசாலைக்கு சென்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றார்.

காய்ச்சல், வயிற்றோட்டம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள் இங்கு சிகிச்சை பெற பெருமளவில் வருகின்றார்கள்.

வார்ட்டுகள் எதுவும் இயங்காததிருப்பதினால் இவர்களை வார்ட்டுகளில் அனுமதித்து சிகிச்சை அளிக்க முடியாதநிலைஏற்பட்டுள்ளது

வார்ட் கட்டடங்களும், தளபாடங்களும் சேதமடையாது நல்ல நிலைமையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட வைத்திய அதிகாரி பதவி வெற்றிடமாக இருந்து வருகின்றது.

அத்துடன் இங்கு பணியாற்றிய பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களும் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் பணியாற்றி வருகின்றனர். மருந்துக்கலவையாளர், குடும்ப நல சேவையாளர் ஆகியபதவிகளும் தற்போது வெற்றிடங்களாக இருந்து வருகின்றன.

வேலணை அரசினர் வைத்தியசாலையிலுள்ள குடும்ப நல சேவையாளரே இங்கும் பதில்கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என்றும், ஊழியருக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்றும் இப்பகுதி பொது அமைப்புகள் யாழ். சுகாதார திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. தீவுப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினரிடமும் இதுபற்றி முறையிடப்பட்டுள்ளதாக அறியப் படுகின்றது. (இ-135)

# அரச ஊழியர் சம்பள உயர்வு விவரம்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்த சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில், வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 85 சத வீத மட்ட சம்பளத் திட்டமானது 1997 தொடக்கம் அமுல் நடத்தப்பட உள்ளது.

1991 இல் 40 வீதம் 1998 இல் 60 வீதம். என இரண்டு அடிப்படைகளில் இந்த அதிகரிப்பு வழங்கப்பட உள்ளது. அரசாங்க ஊழியர்களின் மாற்றியமைக்கப்பட்டுள்ள சம்பளத்திட்டமானது பின்வருமாறு அமைந்துள்ளது. இதற்கான 2/97 இலக்க சுற்றறிக்கை சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை நிருவாக சேவை
இலங்கை பொறியியல் சேவை
இலங்கை விஞ்ஞான சேவை
இலங்கை கமத்தொழில் சேவை
இலங்கை விலங்கு உற்பத்தி சேவை
இலங்கை திட்டமிடல் சேவை
இலங்கை கணக்காளர் சேவை
இலங்கை கல்வி நிருவாக சேவை
ஆசிரியர் கல்வி புகட்டுவோர் சேவை

| | |
|---|---|
| வகுப்பு 1 | ரூபா 13600 — 10x680 — 2400 |
| வகுப்பு 2 தரம் 1 (2) | ரூபா 10625 — 7x460 — 13845 |
| வகுப்பு 2 தரம் 2 (3) | ரூபா 7225 — 15x225 — 10600 |

**இலங்கை ஆசிரியர் சேவை**

| | |
|---|---|
| வகுப்பு 3 தரம் 2 | ரூபா 3825 — 14x110 — 6x130 — 6145 |
| வகுப்பு 3 தரம் 1 | ரூபா 4595 — 9x110 — 8x130 — 6625 |
| வகுப்பு 2 தரம் 2 | ரூபா 5610 — 12x205 — 8070 |
| வகுப்பு 2 தரம் 1 | ரூபா 7535 — 7x250 — 9285 |
| வகுப்பு 1 | ரூபா 9820 — 10x460 — 14430 |

**இலங்கை அதிபர் சேவை**

| | |
|---|---|
| வகுப்பு 3 | ரூபா 5610 — 12x205 — 8070 |
| வகுப்பு 2 தரம் 2 | ரூபா 7535 — 7x250 — 9285 |
| வகுப்பு 2 தரம் 1 | ரூபா 9820 — 10x460 — 14430 |
| வகுப்பு 1 | ரூபா 10290 — 10x460 — 14890 |

**பொது எழுதுநர் சேவை**

| | |
|---|---|
| அதியுயர் வகுப்பு | ரூபா 6615 — 16x205 — 9895 |
| வகுப்பு 1 | ரூபா 5270 — 15x110 — 7220 |
| வகுப்பு 2 பிரிவு அ | ரூபா 4375 — 9x110 — 8x130 — 6405 |
| வகுப்பு 2 பிரிவு ஆ | ரூபா 3825 — 14x110 — 6x130 — 6145 |

**சுருக்கெழுத்தாளர் சேவை**

| | |
|---|---|
| அதியுயர் தரம் | ரூபா 5610 — 15x205 — 8685 |
| வகுப்பு 1 | ரூபா 5270 — 15x110 — 7220 |
| வகுப்பு2 | ரூபா 4375 — 9x110 — 8x130 - 6405 |

**தட்டெழுத்தாளர் சேவை**

| | |
|---|---|
| அதியுயர் தரம் | ரூபா 5610 — 15x205 — 8685 |
| வகுப்பு 1 | ரூபா 5270 15 x 110 — 7220 |
| வகுப்பு 2 பிரிவு அ | ரூபா 4375 — 9x110 — 8x130 — 6405 |
| வகுப்பு 2 பிரிவு ஆ | ரூபா 3825 --14x110 — 6x130 — 6145 |

**சிறாப்பர் சேவை**

| | |
|---|---|
| வகுப்பு 1 | ரூபா 5270 — 15x110 — 7220 |
| வகுப்பு 2 பிரிவு அ | ரூபா 4375 — 9x110 — 8x130 — 6405 |
| வகுப்பு 2 பிரிவு ஆ | ரூபா 3825 — 14x110 — 6x130 — 6145 |

**மொழிபெயர்ப்பாளர் சேவை**

| | |
|---|---|
| விசேட வகுப்பு | ரூபா 8125 — 11x225 — 10600 |
| வகுப்பு 1 | ரூபா 5850 —4x130 — 10x205 — 1x225 — 8645 |
| வகுப்பு 2 தரம் 1 | ரூபா 5270 — 15x110 — 7220 |
| வகுப்பு 2 தரம் 2 | ரூபா 4375 — 9x110 — 8x130 —6405 |

**கணக்குப் பதிவுநர் சேவை**

| | |
|---|---|
| வகுப்பு 1 | ரூபா 5270 — 1x4110 — 7220 |
| வகுப்பு 2 பிரிவு அ | ரூபா 4375 — 9x110 — 8x130 — 6405 |
| வகுப்பு 2 பிரிவு ஆ | ரூபா 3825 — 14x110 — 6x130 — 6145 |

**களஞ்சியக் காப்பாளர் சேவை**

| | |
|---|---|
| வகுப்பு 1 | ரூபா 5270 — 15x110 — 7220 |
| வகுப்பு 2 பிரிவு அ | ரூபா 4375 — 9x110 — 8x130 — 6407 |
| வகுப்பு 2 பிரிவு ஆ | ரூபா 3825 — 14x110 — 6x130 — 6145 |

**அலுவலகப் பணியாளர் சேவை**

| | |
|---|---|
| வகுப்பு 1 உம் வகுப்பு 1 அ வும் | ரூபா 3740 — 23x110 — 6270 |
| வகுப்பு 2 | ரூபா 3625 — 10x75 — 8x110 — 5255 |
| வகுப்பு 2 உம் வகுப்பு 3 அ வும் | ரூபா 3400 — 20x75 — 4900 |

**தொழில் அலுவலர்கள்**

| | |
|---|---|
| வகுப்பு 1 | ரூபா 6375 — 12x205 — 8835 |
| வகுப்பு 2 | ரூபா 5610 — 10x130 — 6x205 — 8140 |

**நூலகர்கள்**

| | |
|---|---|
| அதியுயர் தரம் | ரூபா 8125 — 11x225 — 10600 |
| தரம் 1 | ரூபா 6890 — 8x205 — 10x225 — 10780 |
| தரம் 2 | ரூபா 5695 — 6x130 — 9x205 — 8320 |
| தரம் 3 | ரூபா 5610 — 10x130 — 6x205 — 8140 |

**நலன்புரி அலுவலர்கள்**

| | |
|---|---|
| வகுப்பு 1 | ரூபா 5270 — 15 x 110 — 7220 |
| வகுப்பு 2 | ரூபா 4375 — 9 x 110 — 8 x 130 — 6405 |

சில முக்கிய சேவைகளின் சம்பளத்திட்டங்கள் மேலே தரப்பட்டுள்ளன இந்த சுற்றறிக்கையில் 103 சம்பள அளவுத்திட்டங்கள் தரப்பட்டுள்ளன.

1997 - 01 - 01 தொடக்கம் படிகள் பல நிறுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சம்பளத்தோடு சேர்க்கப்பட்டுள்ளன. புகையிரத ஆணைச்சீட்டு வகுப்புக்கள் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளன.

முதலாம் வகுப்பு மாதாந்த சம்பளம் 6370 பெறுபவர்.
இரண்டாம் வகுப்பு மாதாந்த சம்பளம் 5170 பெறுவர்.
மூன்றாம் வகுப்பு மற்றையவர்கள்.

ஓய்வூதியம் புதிய முழுச்சம்பளத்திற்கும் பொருத்தமாகக் கணிக்கப்பட உள்ளது.

சகல சம்பளங்களும் படிக்குப்படி செய்யப்பட உள்ளன. 325 ரூபாவிற்கு மேல் சம்பள அதிகரிப்பு பெறுகின்றவர்களுக்கு குறைந்த பட்சம் 1997- 01 - 01 அன்று 325 ரூபா கிடைக்குமாகில் 1998 – 01 - 01 இல் கிடைக்கும். இது மேற்படி இரண்டு கட்டமாக 40 வீதம் 60 வீதம் என்ற அடிப்படையில் கிடைக்கும்.

விதவைகள் அனாதைகள் நிதியும் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

3775 வரை சம்பளம் உள்ளவர்கள் 4%
5830 வரை சம்பளம் உள்ளவர்கள் 6%
5830 ரூபாவுக்கு மேல் 7%

வருடாந்த சம்பள உயர்வு தினம் மாற்றப்பட மாட்டாது. உச்ச எல்லையில் தேங்கி நிற்பவர்களுக்கு இரண்டு வருடத்திற்கு ஒரு சம்பள உயர்வு 1997 - 01 - 01 தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

மேலதிக வேலை கொடுப்பனவு போன்ற பல விடயங்கள் உட்பட இந்தச் சுற்றறிக்கையில் சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பளத்திட்டத்தில் உள்ள முரண்பாடுகள் சம்பந்தமாக முறைப்பாடு தெரிவிப்பதற்காக சம்பள முரண்பாட்டுக் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 1997 - 02 - 28 தினத்திற்கு முன்னர் செயலாளர், சம்பள முரண்பாட்டுக் குழு இல. 321 இரண்டாவது மாடி, லக்ஷ்மன் கட்டடம், கொழும்பு 3 என்ற விலாசத்திற்கு அரசாங்க ஊழியர்களும், தொழில் சங்கங்களும் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

ஜனவரி நிலுவையுடன் பெப்ரவரி மாதச் சம்பளத்துடன் புதிய சம்பளம் கிடைக்கும் என பரவலான எதிர்பார்ப்பு இருந்தாலும் தனித்தனியாக சம்பளம் மாற்றக் கடிதங்கள் தயாரிக்க வேண்டியிருப்பதால் பெரும் தொகையான ஆளணிகளைக் கொண்ட சேவைகளைப் பொறுத்தவரையில் புதிய சம்பளம் கிடைக்கத் தாமதமாகலாம். ★

## ஆலய சந்நிதிகளில்

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோயில் சுற்றாடலில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ஓதுவார் திரு. சி. தில்லைமணியான் பண்ணிசை இடம் பெறும்.

★ ★ ★

உடுப்பிட்டி இமையாணன் துவாளி வீரகத்திப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

இம்மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் மஹோற்சவம் முடிவடையும்.

★ ★ ★

மேலைப் புலோலி தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம் மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரதோற்சவமும், 22 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-173)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி சந்திரசேகர விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (ஐ-30)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திடீர்த் தேடுதல்களால் திருமலைநகர் ஸ்தம்பிதம்

## அங்கு அமைதியற்ற சூழ்நிலை

திருகோணமலை, பெப். 13

திருகோணமலை நகர்ப் பகுதியில் தினமும் திடீர்த் தேடுதல் நடவடிக்கை மும்முரமாக நடைபெறுவதால் அங்கு அமைதியற்ற சூழ்நிலை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புப் படையினரின் விசேட குழு ஒன்று பொலீஸாரின் உதவியுடன் இந்தத் திடீர்த்தேடுதல்களை மேற்கொள்கிறது.

திடீரென முக்கிய சந்திகளில் படையினர் தடைகளைப் போட்டு, அப்பகுதிகளில் நடமாடுபவர்கள், வீடுகளில் இருப்போர் ஆகியோரைச் சோதனை செய்கிறார்கள்.

இவ்வாறு நடைபெறும் தேடுதல் ஒரு மணி நேரம் நீடிப்பதாகவும் —

அந்நேரங்களில் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

'யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்காக திருமலைக்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இந்தத் திடீர்த்தேடுதல்களின் போது பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை நகருக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்தே இத்தேடுதல்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. (ஐ-150-2)

## செங்கலடியில் 20 கடைகள் தீக்கிரை

மட்டக்களப்புசெங்கலடியில் கலவரத்தைத் தூண்டும் நோக்கில் விஷமிகள் சிலர் கடைகளுக்குத் தீ வைத்துள்ளனர்.

இருபதுக்கும் மேலான கடைகள் எரிந்தன என்று வெரித்தாஸ் வானொலிச் செய்தி தெரிவித்தது. (ஐ-3)

# அரசுக்குத் துணை போவதை விட புலிகளுடன் பேசுவதே சிறந்த வழி

### முஸ்லிம் கட்சித் தலைவர் கூறுகிறார்

மட்டக்களப்பு, பெப். 13

வடக்கு - கிழக்கில் நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கும் — இனப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வைக் காண்பதற்கும் — முஸ்லிம் மக்கள் அரசாங்கத்துக்கு உதவி செய்து அவர்களது நலனைப் பாதுகாப்பதற்கு துணை போவதை விட விடுதலைப் புலிகளுடன் பேசுவது சிறந்த வழியாகும்.

இப்படி முஸ்லிம் கட்சித் தலைவர் சட்டத்தரணி ஏ. எம்.எச். சேகு இஸடீன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய அவர் தேசிய இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு முஸ்லிம்களே முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்று கூறிக்கொண்டு சிங்கள அரசாங்கங்கள் இலாபம் அடைந்து வருகின்றன.

கடந்த காலத்தில் ஐ.தே.க தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப் போவதாகக் கூறிக் கொண்டு உருப்படியாக எதையும் செய்யாமல் காலத்தை இழுத்தடித்துக் கொண்டு வந்தது.

இப்போது பொது மக்கள் ஐக்கிய முன்னணி அதிகாரப் பரவலாக்கல் திட்டம் என்று கூறிக்கொண்டு தமிழ் - முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசிக் காலத்தை இழுத்தடித்து வரும் அதே நேரம், பேசப்படவேண்டிய விடுதலைப் புலிகளுடன் பேசாமல் இராணுவ நடவடிக்கை மூலம் அவர்களை அழித்து விடவோ, ஒதுக்கிவிடவோ மனப்பால் குடித்துக்கொண்டு செயல்பட்டு வருகிறது.

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து விடுவதில், அல்லது பலவீனப்படுத்துவதில் வெற்றி காணுமாயிருந்தால் சிறுபான்மை இனத்தவர்களுக்கு இப்போது இருக்கும் ஓரிரண்டு உரிமைகள் கூட சிங்கள இனவாதிகளால் பறிக்கப்பட்டு விடும்.

இந்த முயற்சிக்கு முஸ்லிம் மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால், சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் வீழ்ந்த கதையாகிவிடும்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் தமிழ் சமூகம் என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் மனம் திறந்து பேச்சுக்களில் ஈடுபடவேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## பளைப் பிரதேச ஓய்வூதியம்

தென்மராட்சி, பெப். 13

பளைப் பிரதேச ஒய்வூதியர்களின் பெப்ரவரி மாத ஓய்வூதியம் [illegible] வங்கி மூலம் [illegible] வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)


வடமராட்சியில்

கேக், மலர் அலங்காரக்

**கண்காட்சி**

**Yogi Home Science Academy**

மாணவியான

திருமதி கல்பனா ஈஸ்வரனின்

மாணவிகளால் நெல்லியடியில் நடத்தப்படும் கண்காட்சி இம்மாதம் **14, 15, 16** ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

**பிரவேசச் சீட்டு: 10/-**

**இடம்:** சனசமூக நிலைய சன்மார்க்கசபை பாலர் பாடசாலை

முருகமூர்த்தி வீதி, நெல்லியடி. (45214)



## சேவை நலம் பாராட்டு

**(13 - 02 - 97)**

யா/ அருணோதயக் கல்லூரி

அளவெட்டி

எமது கல்லூரியில் நீண்டகாலம் சேவையாற்றி தற்பொழுது ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர்களான,

- ★ திரு. வ. இராஜசேகரம்
- ★ திருமதி பி. ஜி. எவ். இராஜேந்திரம்
- ★ செல்வி சீ. கந்தையா
- ★ திரு. அ. அருட்பிரகாசம்
- ★ திருமதி ம. சிவநேசன்
- ★ திருமதி த. குருமூர்த்தி

ஆகியோரை இன்று அவர்களது சேவையைப் பாராட்டி, வாழ்த்திக் கௌரவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ அருணோதயக்கல்லூரி,
மருதனார்மடம். (45241)



## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

அலகு ரீதியான மீட்டல்
வினா விடை வகுப்பு

**97 A/L**

இரசாயனவியல்

**திரு. சிவத்திரன் B. Sc.**

ஆரம்பம்:- 14-02-97 வெள்ளி காலை 7. 00 மணி.

**99 A/L**

ஆரம்பம்:- 15-02-97 சனி மாலை 2.30 மணி. (45239)



## "சாந்திகம்"

பராமரிப்பாளர் (Care Taker)

தேவை

- ★ சாந்திகம் நிறுவனத்திற்கான பராமரிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- ★ பராமரிப்பாளர் இந்நிறுவனத்தில் தங்கி வேலை செய்வதற்கு விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.
- ★ சுயவிவரம், அனுபவம் முதலியவற்றுடன் அண்மையில் பெற்ற இரண்டு நற்சான்றிதழ்கள் அடங்கிய விண்ணப்பங்களை, சாந்திகம், இல. 15, சச்சேரி-நல்லூர் வீதி, சுண்டுக்குளி என்னும் முகவரியில் **20 — 02 — 97** இற்கு முன்னதாக, நேரிலோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்கவும்.
- ★ சம்பளம் மற்றும் வேலை விவரங்கள் என்பவை நேரில் பேசிக்கொள்ளப்படும்.

செயலாளர்
உளவளத்துணை நிலையம்.

(சி/116)


## இதயாஞ்சலி

பல தேவஸ்தானங்களில் உற்சவ சிவாச்சாரியாராகவும்,
பிரதிஷ்டா சிவாச்சாரியாராகவும்,
இந்து மத குரு பீடாதிபதியாகவும்,
தெய்வீகத்தன்மையோடு ஆட்சி புரிந்த

மறைநிறை, கலாநிதி, சிவாகம சிரோமணி, சிவாகம கிரியா சாகரம், வித்தியா சாகரம், யாக சம்ரட்சகர்
அருள்ஜோதி



சிவப்பிரம்மஸ்ரீ

### ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

(நாயன்மார்கட்டு)

அவரது சிவபத பிராப்தியைக் கேட்டு அதிர்ச்சியும், துன்பமும், வேதனையும் அடைகிறோம். சிவாச்சாரியாரின் இழப்பு சைவமத உலகிற்கு பேரிழப்பாகும். அன்னாரின் மகத்தான சேவை, கடமை, கண்ணியம் ஆகியன எமது நெஞ்சை நெகிழச் செய்கின்றன.

ஆத்மா சாந்தியடைய கந்தன் திருவடியை துதி செய்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தென்மட்டுவில் வேரற்கேணி
கந்தசுவாமி கோயில் பரிபாலனசபை,
பிரதமகுரு, அடியார்கள்.

(45254)

## கண்ணீர்ப் பூக்கள்

யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட
முகாமைத்துவ மாணவன்
சி. தர்ஷனின்

அன்புத் தாயாரான

### சிவதாசன் மகேஸ்வரி

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் சக மாணவன் தர்ஷனுக்கும், அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

முதலாம் வருட மாணவர்கள், (1995/96 கல்வியாண்டு)
கலைப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

(45260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பம் வார்த்துப்பூட்டி வாட்டர் பம்மைப் போல் தோட்டங்களுக்கு எடுத்துச்சென்று இறைக்கக்கூடிய நல்ல நிலையிலுள்ள Yanmar Diesel Engine (4 – 5 H.P) விற்பனைக்குண்டு. தொடர்பு: கண்ணன் மில், ஸ்ரேசன் றோட், கோண்டாவில் (நிரு ரியூசன் அருகாமை). (45242)

கணக்கியல் வினா விடை விற்பனைக்குண்டு. ஆக்கம்:- ஆசிரியர் K. ஸ்ரீஸ்கந்தகுமார். கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. (45246)

### வாங்கப்படும்

உதிரிப்பாகங்களுக்காக நல்ல நிலையிலுள்ள ரி.வி., டெக், சசற் றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கு வாங்கப்படும். M.V. மதுரநாயகம், இல. 284, ஸ்ரான்லி வீதி, [நாக விகாரை முன்பாக] யாழ்ப்பாணம். (45244)

### காணி விற்பனைக்கு

3¼ பரப்பு காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கும், மீனாட்சி அம்மன் கோயிலுக்கும் அருகாமையில். விவரம்: செ. தங்கராசா பத்தர், பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (45248)

### தவறிவிட்டது

கடந்த 07-02-97 அன்று காங்கேசன்துறை யாழ். செயலக கிளைக் கட்டடத்தில் சிவஸ்கந்தசர்மா ஆகிய எனது நீலநிற bag தவறிவிட்டது. இதில் முக்கிய சான்றிதழ்களும் உள்ளமையால் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்களிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9271)

ரட்ணம் சூரியகுமாரி 576110928 இல. அடையாள அட்டை வட்டுக்கோட்டை மாவடிச் சந்திக்கு அருகில் 06-02-97 அன்று தவறிவிட்டது. எடுத்தவர்கள் க. நல்லையா, அதிபர் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (45229)

## லண்டனில் சென். ஜோண்ஸ் சிறுவர் முகாம்

யாழ்ப்பாணம், பெப். 13

10 தொடக்கம் 16 வயதுக்கு உட்பட்ட சென். ஜோண்ஸ் அம்புலன்ஸ் சிறுவர்களுக்கான சிறுவர் முகாம் ஒன்று லண்டனில் நடைபெறவிருக்கிறது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தச் சிறுவர் முகாமில் உலகின் பல நாடுகளில் இருந்தும் சென் ஜோண்ஸ் சிறார்கள் பங்கு பற்றவுள்ளனர்.

இலங்கையில் இருந்தும் சிறுவர்களை அழைத்துச் செல்ல பிரிவு அத்தியட்சகர் தரத்திலான பெண் உறுப்பினர் ஒருவரை பாடசாலை அதிபரூடாக பிரதேச ஆணையாளரின் சிபார்சுடன் அனுப்பி வைக்குமாறு கொழும்பிலிருந்து கோரப்பட்டிருப்பதாகவும்—

தகுதி உடைய பெண்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் யாழ். பிரதேச ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் தெரிவித்தார். (ஐ)


# தூரிகை நுண்கலை நிலையம்

சட்டநாதர் வீதி, நல்லூர்.

புதிய வகுப்புகள்

ஆண்டு 3 இல் இருந்து O/L வரை

சங்கீதம் - திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்
சித்திரம் - செல்வி ஜெயா
நடனம் - பிரபல ஆசிரியை
தையல் பயிற்சி - திருமதி தவமணிதேவி துரைராஜா

**ஆரம்பம்: 15-02-1997 சனிக்கிழமை**
முற்பகல் 10.00 மணி.

(45185)


## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

# முக்கிய அறிவித்தல்

### சங்க அங்கத்தவர்களுக்கான பங்குப்பணம் ரூபா 100/-

1992 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக அங்கத்தவர்களின் பங்குப் பணம் ரூபா 100/- ஆக இருத்தல் வேண்டுமென 1996-12-21 ஆம் திகதி நடைபெற்ற சங்கப் பொதுக் கூட்டத்தில் சங்க உப-விதி திருத்தத்தின் மூலம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ சங்க உப-விதிகளுக்கு அமைவாக சங்கத்தில் அங்கத்தவராக சேர விரும்புபவர்கள் ரூபா 100/- பங்குப் பணமாக ஒரே தடவையிலோ அல்லது பகுதியாகத் தொடர்ந்து பத்து மாதத் தவணை முறையிலோ செலுத்துதல் வேண்டும்.

★ பங்குப்பணம் செலுத்தி ஒரு வருடம் பூர்த்தி அடைந்த பின் தான் வாக்களிக்கும் தகுதி பெறுவர். கிளை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

★ 1996-12-21 ஆம் திகதிக்கு முன்னர் அங்கத்தவர்களாகச் சேர்ந்து, ரூபா 100/- க்கு குறைவான பங்குப்பணம் உள்ளவர்கள், மிகுதிப் பணத்தைச் செலுத்தி, முழுத்தொகை ரூபா. 100/- ஆக ஆக்கிக் கொள்ளலாம். 1997-12-31 ஆம் திகதி வரை மிகுதிப் பணத்தைச் செலுத்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

★ ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு காலாண்டுக்கும், வாக்காளர் பட்டியல்கள் பூர்த்திசெய்யப்படும்.

★ மேலதிக விவரங்களுக்கு எழுத்து மூலமாகவோ அல்லது நேர்முகமாகவோ சங்கச் செயலாளரை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளலாம்.

சி. சிவமகாராசா
தலைவர்.

சி. முருகையா
செயலாளர்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.
மல்லாகம்.
1997. 02. 06. (சி/115)

## மணமக்களின் நெஞ்சம் கனிந்த நன்றிகள்

**1997 - 02 - 06** வியாழக்கிழமை நடந்தேறிய எமது திருமணத்திலும், விருந்துபசாரத்திலும் நேரில் கலந்து கொண்டு வாழ்த்துக்களையும், பரிசில்களையும் வழங்கியும் அனுப்பிவைத்தும் மகிழ்வித்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள், சக பணிநிலையில் உள்ளோர், மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ. பாஸ்கரன் - வத்சலா தம்பதிகள்,

வைத்தியசாலை வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (45253)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

### திரு. க. நல்லதம்பி

(தொழில் நுட்ப உத்தியோகத்தர்)

**அவர்களின் மனைவியாரின்**

மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆய்வுகூட உதவியாளர்கள்
**விலங்கியல்துறை,**
(45256) **யாழ். பல்கலைக்கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**திரு. க. சிவதாசன்** அவர்களின் துணைவியார்

### ஜெகதீஸ்வரி

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள்.
யா/ யூனியன் கல்லூரி,
(45243) யா/ பொன்.பரமானந்தர் ம. வி.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை
சிரேஷ்ட விரிவுரையாளர்
**Dr. திருமதி பஞ்சராஜா** அவர்களின் கணவர்

### சிவப்பிரகாசம் பஞ்சராஜா

08 - 02 - 97 அன்று காலமாகிவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சித்தமருத்துவ மாணவ மன்றம்**
(9272)

# நினைவஞ்சலி

### 2 ஆம் ஆண்டு

தோற்றம்: 21 — 08 — 1920



மறைவு: 08 — 03 — 1995

## அமரர் கதிரவேலு நமசிவாயம்

**திதி: 13-02-1997**

ஆண்டு பவவருனி வார்ந்தமதி மாசியதிற்
பூண்டதிதி பூர்வத்துச் சப்தமி நாள் - நீண்டபுகழ்ச்
சீரார் நமசிவா யப்பெயரோ னீசனடி
நேராகச் சென்றடைந்தானே.

கிழக்குவளவு,
மல்லாகம். (45252)

### 3 ஆம் ஆண்டு

தோற்றம்: 12 — 05 — 1917



மறைவு: 07 — 06 — 1994

## திருமதி சிவப்பிரகாசம் பத்மாவதி

(திலகவதி)

**திதி: 13-02-1997**

செப்புநற் பவவருடஞ் சேரிடபஞ் சாரபரம்
ஒப்பிலாச் சதுர்த்தசியோடுற்ற செவ்வாய் - இப்புவியில்
மல்குபத் மாவதியெனும் மாதரசி தாள்மறைந்து
நல்லகதிப் பேறடைந்த நாள்.

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ur Branch Library

# உதயன்

## அவசரம் ஆபத்தாகலாம்

தென்னிலங்கையில் உள்ளூராட்சித்தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அவசரப்பட்டது. அதிகாரப் பரவல் திட்டத்தை ஆராய்ந்து வரும் தெரிவுக் குழுவின் பணிகளைப் பின்தள்ளிவிட்டு, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு முடிவு செய்தது.

ஆனால் தேர்தல் களக் காட்சிகளைப் பார்த்தால் அரசாங்கம் இது விடயத்தில் அவசரப்பட்டுத் தனக்கு ஆபத்தைத் தேடிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படக்கூடும் என்றே தோன்றுகிறது.

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் அதிகப்படி வாக்குப் பலம் ஒன்றே ஒன்று தான். அதற்குக் கை கொடுத்தவர் மலையக மக்கள் முன்னணியின் சந்திரசேகரனே.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட முடிவாகியுள்ளது. இது சந்திரசேகரனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவரது மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது.

தமது வசம் உள்ள பிரதி அமைச்சர் பதவியைத் துறந்தேனும் அவர் தமது தனித்துவத்தை நிலைநாட்ட விரும்புகிறார் போலத் தெரிகிறது.

அத்தகைய சூழ்நிலையில் அவர் நாடாளுமன்றத்தில் அரசுடன் வைத்திருக்கும் கூட்டு முறிந்துபோகும் சாத்தியம் நிறையவும் உண்டு.

இதே போல ஸ்ரீமானி அத்துலத்முதலியின் கட்சி தேர்தலில் அரசாங்கக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவில்லை. தாமும் தனியாகப் போட்டியிடவும் இல்லை. நடுவு நிலைமை வகிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

ஸ்ரீமானியின் இந்த நிலைப்பாடு அரசாங்கத்திற்குள் பெரும் அதிருப்தியை உண்டாக்கி உள்ளது. அவரது பிரதான அமைச்சான போக்குவரத்து அமைச்சுப் பறிக்கப்பட்டு, சிறகொடிந்த பறவையாக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

அவ்வாறு இறக்கை ஒடித்தால், ஸ்ரீமானி வஞ்சம் தீர்க்கும் பொருட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி தரப்புக்கு மாறலாம். அதனைவிட அவருக்கு மாற்று வழியில்லை என்று சொல்லப்படுகின்றது. அதிகாரப் பரவல் விவகாரத்தில், பொ. ஐ. மு. கட்சியைவிட, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீமானிக் கட்சிக்குமே அதிக ஒருமைப்பாடும் பொருத்தமும் உண்டு. ஆகையால் அவை ஒன்று சேரும் வாய்ப்பு அதிகம்.

இத்தகைய ஒரு நிலை உருவாகுமானால், நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் வாக்குப்பலம் மிகவும் குறைந்து விடும். இ.தொ.கா. உட்பட தமிழ்க்கட்சிகள் வெளியால் இருந்து வழங்கும் ஆதரவிலேயே அது முழுக்க முழுக்கத் தங்கியிருக்க நேரிடும். தொங்கு நிலையில் நின்று சங்கடப்பட நேரிடும்.

உள்ளூராட்சித் தேர்தல், தலையைத் தானாக சுவரில் அடித்துக் கொள்ளும் நிலையை அரசுக்கு உருவாக்கும்.

அதிகாரப் பரவல் திட்டத்தை மேலும் பின் தள்ளவும், முடக்கவும் இந்நிலை நிர்ப்பந்திக்கலாம்.

### புத்தூர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்ட — கண்மூடித்தனமான — வன்முறை நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத்தளபதி மற்றும் பிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல ஆகியோரின் கவனத்திற்குத் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள், விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் வழமை நிலை திரும்புவதைத் தடுத்து நிறுத்தும் என்பதும் —

புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தினுள் சிக்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு அரச படைகள் பற்றி கொண்டுள்ள அச்ச உணர்வை அதிகரிக்கச் செய்யும் என்பதும் —

விரக்தியின் விளிம்பில் நிற்கும் அப்பாவிப் பொதுமக்களை — குறிப்பாக இளைஞர்களை — வேறு வழியின்றி புலிகளின்பக்கம் செல்ல நிர்ப்பந்திக்கும் என்பதும் —

சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நகர்ப்புற கெரில்லாத் தாக்குதல் முறைகள் மூலம் புதிய ஆள் திரட்டல் நடவடிக்கைகளுக்குத்திட்டமிட்டுள்ள புலிகளுக்கு, இராணுவத்தின் வன்முறையான பதில் நடவடிக்கைகள் நம்பிக்கையைக் கொடுக்கும் என்பதுடன் இவ்வாறான நகர்ப்புறத் தாக்குதலுக்கு அவர்களை மேலும் ஊக்குவிக்கும் என்பதும் யாவரும் அறிந்ததே.

பொதுமக்களைப் பலி கொள்ளக் கூடியதான — இவ்வாறான — தாக்குதல்களையும் பதில் தாக்குதல்களையும் கழகம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இவ்வாறான நடவடிக்கைகளைக் கைவிடுமாறு புலிகளையும் அரச படைகளையும் கேட்டுக் கொள்கின்றது.

புத்தூர் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் பொதுமக்களை கழகத்தின் உபதலைவர் மாணிக்க தாசன் தலைமையிலான குழுவினர் சென்று பார்வையிட்டதுடன் தேவையான உதவிகளையும் வழங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளை அரசிடம் இருந்து பெற்றுக் கொடுப்பது சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### தவக்கால சிந்தனை

**(2ஆம் நாள் - வியாழன்)**

''ஒருவன் உலகமெலாம் தனதாக்கிக் கொண்டாலும் தன்னையே பாழாக்கினால் பயன் என்ன?'' இறைவனின் இந்த அழைப்பு எமக்கு சவாலாய் உள்ளதை உணருவீரா?

''என்னைப் பின் செல்ல விரும்புகின்றவன் தன்னையே மறுத்துத்தன் சிலுவையை நாள் தோறும் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்.'' என்கிறார். துன்பங்கள், துயரங்கள், சுமைகளைக் கண்டு ஒதுங்குவீரா? இறை வார்த்தையை நம்பி உன்பயணத்தை இன்று தொடருவீரா?

—யோசப் பாலா

### நாளை

**மாசி 5**

**வெள்ளிக்கிழமை**

திதி: ஸப்தமி காலை 8-43 வரை.

நட்சத்திரம்: பரணி முற்பகல் 10-31 வரை.

கார்த்திகை விரதம்

ராகுகாலம்: 11-03-12-33

சுபநேரம்: 6-33-8-03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### கப்பல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றிவரக்கூடிய ''சஜிந்த'' என்ற சரக்குக் கப்பலையும் ஒன்றுவிட்ட ஒரு நாள் பயணிகளை ஏற்றிவரும் சேவையில் — தற்காலிக அடிப்படையில் — ஈடுபடுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேசமயம் 'லங்காமுடித' கப்பலையும் பயணிகள் சேவைக்கு அமர்த்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. (உ-3-150)

### விசாரணைநடத்த ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும், அதன் பின்னர் அப்பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்பட்டது குறித்தும் தமிழ்க் கட்சிப் பிரமுகர்கள் இராணுவக் கட்டளைத் தளபதியிடம் விலாவாரியாக முறைப்பாடு செய்தனர்.

இந்த விடயம் குறித்து விரிவான விசாரணை ஒன்றை நடத்துவதாகவும் —

தவறு செய்தோர் தண்டிக்கப்படுவர் என்றும் —

இராணுவக் கட்டளைத் தளபதி அப்போது உறுதியளித்ததாக அறியவந்தது.

ஈ. பி. டி. பியின் சார்பில் அதன் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ஜெகன், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் திரு சுகு, திரு. றொபேர்ட், திரு. மோகன் மற்றும் புளொட் சார்பில் அதன் உப தலைவர் திரு. மாணிக்கதாசன், அதன் உதவி அரசியல் பொறுப்பாளர் திரு. நா. குருபரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

**காணாமற்போனோர்**

கடந்த ஜனவரியிலும் இந்த மாதத்தில் இது வரையும் யாழ். குடாநாட்டில் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போனவர்கள் தொடர்பாக — அவர்களின் உறவினர்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் — தாங்கள் தயாரித்த பெயர்ப் பட்டியலை இச்சந்திப்பின் போது கட்டளைத் தளபதியிடம் தாங்கள் வழங்கியதாக ஈ பி. டி. பி. பேச்சாளர் தெரிவித்தார்.

அவர்களை விடுவிப்பது குறித்தும் —

காங்கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவிப் பொதுமக்களை விடுவிப்பது குறித்தும் —

புத்தூர் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக தாங்கள் திரட்டிய தகவல்கள் மற்றும் விவரங்கள் குறித்தும் —

இச்சந்திப்பில் தாங்கள் விளக்கியதாக அவர் சொன்னார்.

இந்த விடயங்கள் குறித்து உடன் கவனம் எடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கட்டளைத் தளபதி உறுதியளித்தார் என்றும் அவர் கூறினார்.

குடாநாட்டில் கசிப்பு உற்பத்தியால் ஏற்படும் சமூகச் சீர்கேட்டைத் தவிர்ப்பதற்காக அதனைத் தடுப்பதற்கான வழி வகைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டதாகவும் தெரியவந்தது.

**தந்தை செல்வா நூற்றாண்டு**

தந்தை செல்வாவின் நூற்றாண்டு நினைவு நாள் அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகவிருப்பதால், செல்வா நினைவுத் தூபி அமைந்த பகுதிக்கு மக்கள் செல்வதற்குஅனுமதிக்கப்பட வேண்டிய அவசியத்தை 'புளொட்' பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

நினைவுத் தூபி அமைந்த பகுதியை மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூட்டாக — சிரமதானம் மூலம் — துப்புரவு செய்ய எண்ணியுள்ளதாகவும் —

அதற்கு படையினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் —

'புளொட்' பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கட்டளைத் தளபதி ஏற்றுக்கொண்டதாகவும் தெரியவந்தது. (உ-)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தாண்டிக்குளம் ஊடாக இன்று போக்குவரத்து

கொழும்பு, பெப். 13

கடந்த ஐந்தாம் திகதி ''எடிபல'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து கடந்த எட்டு நாட்களாகத் தடைப்பட்டிருந்த — தாண்டிக்குளம் ஊடான — போக்குவரத்து இன்று மீண்டும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது!

இதற்கான அனுமதியை இராணுவம் வழங்கியிருப்பதாக வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷ் தெரிவித்தார்.

இதனையடுத்து —

வவுனியா நகரின் வடக்கே உள்ள — வன்னிப் பகுதிகளுக்குரிய — உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 18 லொறிகள் இன்று வவுனியா நகரிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக வடக்கே செல்லும் என்றும் அவர் கூறினார். (உ-5)

## வன்னிப் பகுதியில் உணவு தட்டுப்பாடு

கொழும்பு, பெப். 13

வவுனியாவுக்கு வடக்கே வன்னிப் குதியில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

விலைக்கு விற்பதற்கும் உணவுப்பொருள்கள்இல்லை. நிவாரணத்துக்குரிய உணவுப் பொருள்களும் இல்லை. அதனால் நிலைமை மோசமடைந்துள்ளது என்று அவர் சொன்னார்.

ஜனவரி 26ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து தாம் புறப்பட்ட போதுஒரு கிழமைக்குப் போதுமான உணவுப்பொருள்களேகையிருப்பில்இருந்தன — என்று அவர் சுட்டிக்காட்டினார்.

'எடிபல' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து வன்னிக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள்விநியோகம் முற்றாகத் தடைப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-4)

## மண்எண்ணெய் விநியோகம்; அடுத்த வாரம் முதல் புதிய முறை

குடும்பங்கள், விவசாயிகள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் ஆகியோருக்கு மண்எண்ணெய் வழங்கும் புதிய திட்டம் குறித்து பெற்றோலியம் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக பாவனையாளர்களுக்கு விடுத்த அறிவுறுத்தலின் பிரகாரம் மண்எண்ணெய் விவகாரம் பின்வருமாறு அமையும்.

இந்த திட்டம் அடுத்த வாரம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

★ மாதாந்தம் ஒவ்வொரு குடும்பமும் 5 லீற்றர் மண்எண்ணெயை ப. நோ. கூ. சங்கங்களில் பெறலாம்.

★ குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் இருந்தால் அக்குடும்பங்கள் 10 லீற்றர் வரை மண்எண்ணெய் பெற முடியும்.

★ விவசாயிகள் வாராந்தம் 10 லீற்றர் மண்எண்ணெயை தமது பிரிவில் உள்ள முகவரிடம் பெற முடியும்.

★ பல்கலைக்கழக மாணவர்களுக்கு 10 நாள்களுக்கு ஒருதடவை 5 லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்படும். பல்கலைக் கழகத்தை சூழவுள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் இவர்களுக்கு மண்எண்ணெய் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

★ மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் குடாநாட்டில் இயங்கும் எந்தவொரு எரிபொருள் முகவரிடமும் பிரதேச செயலரின் அனுமதிப் பத்திரம் இன்றியே கொள்வனவு செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

★ மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் போது, பிற பகுதியில் மண்எண்ணெய் தேவைப்படுமிடத்து, அருகில் உள்ள எரிபொருள்முகவரிடம் தமது மோட்டார் சைக்கிள் இலக்கத்தைப் பதிவு செய்து பெறமுடியும்.

ஆனால் எக்காரணம் கொண்டும் கொள்கலனில் மண்எண்ணெய் பெற முடியாது. (அ-3)

### ஐ தே. க ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்த சிலர் தெரிவித்தனர்.

எம். பி. சுஸந்த புஞ்சிநிலமே தனது கையிலிருந்த துப்பாக்கியால் எல்லாவெலவைச் சுட்டார் என ஒரு சாட்சி குறிப்பிட்டார்.

### இரத்தினபுரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதித் தினம் நேற்று என்பதால் அதற்கு வசதியாக நேற்றுக் காலை இரத்தினபுரியில் ஊரடங்கு உத்தரவு விலக்கப்பட்டது.

இத்தேர்தல்களில் போட்டியிடும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியல்களைச் சமர்ப்பிப்பதற்காக அக்கட்சிப் பிரமுகர்கள் நேற்றுக் காலை இரத்தினபுரி மாவட்டச் செயலகத்துக்கு வந்தபோது முன்னணியின் ஆதரவாளர்கள் — சுமார் இருபத்தையாயிரம் பேர் — அங்கு கூடியதாகக் கூறப்படுகின்றது.

நாலந்தா எல்லாவெல கொலைச் சம்பவத்தால் ஆத்திரமுற்றிருந்த இக்கூட்டத்தினர் அங்கிருந்த பெற்றோல் நிலையம் ஒன்றுக்குத் தீ வைத்த பின்னர் பல கடைகளைக் கொள்ளையிட்டு நெருப்பு வைத்தனர்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே கூட்டத்தினைக் கலைப்பதற்காகப் பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசினர்.

அதன் பின்னர் நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் நேற்றுப் பிற்பகல் 2 மணி தொடக்கம் கால வரையறையற்ற ஊரடங்கு உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

### பூநகரி...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

அரசு ஆரம்பித்துள்ளது.

இதன் மற்றொரு நோக்கம் தள்ளாடி முகாமைப் பாதுகாப்பதாகவும் அமைந்துள்ளது. மன்னார்த் தீவுக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ள இந்த முகாமை புலிகள் தாக்கினால் மன்னார்த் தீவையும் அரசு இழக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.

முல்லைத்தீவு வீழ்ச்சியடைந்த பின்னர் புலிகளின் இலக்கு தள்ளாடி முகாமாகவே இருந்தது. அந்த முகாமைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் படைகளுக்கு உண்டு. அதனால் புலிகளைப் படையினர் முந்திக் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-150)

வடமராட்சிப் பகுதி

## வெளிவாரி பட்டப்படிப்பு

### மாணவ நண்பர்களின் கவனத்திற்கு

★ 01 — 02 — 97 (சனி) அன்று தொடக்கம் எமது கல்வியைத் தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து —

★ சேவை நோக்கம் படைத்தவர்களான இந்துநாகரிகம், அரசியல் விஞ்ஞானம், மெய்யியல் முதலிய பாட விரிவுரையாளர்களின் ஒத்துழைப்புடனும் தளராத உறுதியோடும் வேறோர் இடத்தில் எமது கல்வியைத் தொடர்கின்றோம்.

★ மேலும் இம் முயற்சியானது, தனிப்பட்ட இலாப நோக்கத்தையோ, வேறு எதனையும் பின்னணியாகக் கொண்டதோ அல்ல.

★ இங்கு மாணவர்கள் விரும்பிய விரிவுரையாளர்களை அழைத்துத் தமது கல்வியைத் தொடரலாம்.

★ அத்தோடு அனைத்துத் தரப்பின் ஒத்துழைப்போடு கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

**G. A. Q. - 200/-, B. A. I. 200/- ,B.A. II 150/-**

நன்றி.

உங்கள்
**எஸ். இராகவானந்தன்**
**எஸ். சுபசீலன்**
(சி/119) (மாணவர்கள் சார்பாக)



## மாதகல் லூர்து அன்னையின் பெருவிழா

### (கெபித்திருநாள்)

நிகழும் மாசி மாதம் 15-02-1997 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்திலிருந்து லூர்து அன்னையின் திருச்சுரூபப் பவனி ஆரம்பமாகி, கெபியை அடைந்து திருப்பலி இடம்பெறும். மறுநாள் 16-02-1997 ஞாயிற்றுக் கிழமை காலை 7-30 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

(45262) - பங்கு மக்கள்



### ஆண்டுப் பொதுக் கூட்ட

## அழைப்பு

யாழ்/ மாநகர சபை எல்லைக்குள் வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் அனைவரும், **15 — 02 — 97** சனிக்கிழமை நண்பகல் **12 .00** மணிக்கு கடைகளைப் பூட்டி யாழ்ப்பாணம் வணிகர் கழக ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**இடம்: நமசிவாயம் வித்தியாலயம், கொட்டடி.**

**நேரம்: நண்பகல் 1. 00 மணி.**

**செயலாளர்,**
**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**
(45273)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கணக்காளர்

**திரு. க. சிவகுமார்**

அவர்களின் அன்புத் தந்தை

### திரு. இராமலிங்கம் கனகசபை

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

**பணிப்பாளர், பணியாளர், -**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.**
(சி/118)

## கண்ணீர் அஞ்சலி

எமது வர்த்தக பாட ஆசிரியர்

**திரு. க. சிவகுமார்**

அவர்களின் பாசமிகு தந்தை

### திரு. கனகசபை

12 - 2 - 97 இல் காலமாகிவிட்டார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**கோப்பாய் கல்வி நிலையம்,**
(9275) **மானிப்பாய் வீதி, கோப்பாய்.**

## விசாரணை

சிங்கள மக்களின் உரிமைகள் பாதிப்புற்றது குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள சுயேச்சை ஆணைக்குழு தனது விசாரணையை நாளை கொழும்பில் ஆரம்பிக்கவிருக்கிறது.

கொழும்பு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் மண்டபத்தில் விசாரணைகள் நடைபெறும்.

ஏற்கனவே இந்த ஆணைக்குழு கண்டியில் கூடிய சமயம் பலர் சாட்சியமளித்திருந்தனர். (உ-3-150)

## சிறுமி மரணம்

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட நான்கு வயதுச் சிறுமி அனுமதிக்கப்பட்டு அவசரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு ஒரு சில மணி நேரத்தில் அங்கு மரணமானார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த தம்பிராசா சுரவர்ணா (வயது 4) என்ற சிறுமியே உயிரிழந்தார்.

கடந்த ஒரு வார காலமாக காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இச்சிறுமி மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். (உ-15)

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து இராசையா

நாவற்குளியைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு அம்பலவாணர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசையா 09-02-97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், குணசேகர் (தொழில் நுட்பவியலாளர்), குணசந்தர், மலர்ச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13 - 02 - 1997 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**M. R. சேகர்**
(மகன்)
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (45267)

### திருமதி நல்லையா சரஸ்வதி

அளவெட்டி, அலுக்கையைச் சேர்ந்த திருமதி நல்லையா சரஸ்வதி அவர்கள் 07-02-97 அன்று மன்னாரில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும். நகுலேஸ்வரி, சறோஜினி, வசந்தகுமாரி, கமலாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசேகரம், சிவசுப்பிரமணியம், பாஸ்கரன் ஆகியோரின் மாமியாரும், பஞ்சலிங்கம், சிவபாக்கியம், கண்மணி, பவளம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-02-97 இல் மன்னாரில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**ராசன்**
(மருமகன்)
எரிபொருள் நிலைய
முன் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (45264)

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலாளர் **திரு சு. பரமேஸ்வரன்**

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கனகபூரணம் சுப்பிரமணியம்

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சாயி துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

**- பரிபாலனசபை**

ஸ்ரீசாயிதுர்க்காதேவி ஆலயம்,
கொக்குவில். (45258)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி மகாலிங்கம் உதயா

(பொருளாளர், நல்லூர்க்கந்தன் சிக்கன கடன்-வழங்கும் கழக சமூக அபிவிருத்தி மன்றம்)

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி மகாலிங்கம் உதயா சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் சின்னத்துரை மகாலிங்கம் (முன்னாள் ஒப்பரேட்டர், இராஜா தியேட்டர்) திருமதி அற்புத மலர் (மலர்) ஆகியோரின் அன்பு மகளும், உதயகாந்தனின் அன்புச் சகோதரியும். கோணேசலிங்கம், திருமதி சி. ருக்குமணிதேவி, திருமதி சி. சத்தியபாமா தேவி (சிங்கப்பூர்), திருமதி சி. மகேந்திரதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [13-02-97] காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
**மகாலிங்கம்** (தகப்பன்)
11/15 செம்மணிறோட், **மலர்** (தாய்)
முத்திரைச் சந்தை,
நல்லூர். (45255)

### திருமதி கந்தையா முத்துலட்சுமி

திருமதி கந்தையா முத்துலட்சுமி 12-2-97 புதன் கிழமை காலை இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் மனைவியும், சேமபராபரன் (நல்லூர்ப.நோ கூ. சங்கம் 20ஆம் கிளை முகாமையாளர்), அமரர் திரவிய நாயகம், மஹேந்திரநாயகம் (அறவழி நிலையம், நுணாவில்), கிருபாகுமாரி (யாழ்/மாநகர சபை, நூலகம்), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலலட்சுமி, மகாலட்சுமி (யாழ்/காப்புறுதிக் கூட்டுத் தாபனம்), பரமானந்தம் (முன்னாள் உரிமையாளர், ஸ்ரீ தேவி அச்சகம்) ஆகியோரின் மூத்த சகோதரியும், புஷ்பராணியின் (கொக்குவில்) மாமியாருமாவார்.

இறுதிக் கிரியைகள் 13- 2- 97 இன்று வியாழக் கிழமை 108/1 கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
**S. கந்தையா.**
(45263) (கணவர்)

### வல்லிபுரம் குமாரு

கரணவாய் வடக்கு சந்தை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சவுதி அரேபியா, டோகாவில் கடமையாற்றியவருமான வல்லிபுரம் குமாரு 09 - 02 - 97 அன்று டோகாவில் அகால மரணமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சாமிக்கண்டு, காலஞ்சென்ற அசுபதி, பூபாலு, சிவகுரு, சிதம்பரம், யோகம்மா (திருகோணமலை), அழகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயமாலா, உதயமாலா (சுவிஸ்), புஸ்பமாலா ஆகியோரின் அன்புத்தந்தையும், உலகநாதன், இராசதுரை (சுவிஸ்), சிவாகரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
**மனைவி**
கரணவாய் வடக்கு,
சந்தைவீதி. (45251)

### சுப்பையா மோகனலிங்கம்

(மோகனா ஜுவலர்ஸ், செங்கலடி)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா மோகனலிங்கம் 11-02-97 அன்று காலமானார்.

அன்னார் யோகேஸ்வரனின் (சிறிகிருஸ்ணா ஹோல்ட் ஹவுஸ், செங்கலடி) அன்புச் சகோதரர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**உறவினர்.**
65, கஸ்தூரியார் வீதி,
கணேசா வர்த்தக நிலையம்,
யாழ்ப்பாணம். (45270)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 293/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13 - 02 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org